பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 04 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஊடகங்கள் லாபநோக்கம் கருதாமல், சமுதாயத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண பாடுபட வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

2. சென்னையில் உள்ள தேசிய கடல்வள தொழில்நுட்ப நிறுவனம், நீருக்கு அடியில் ஒளியியல் சோதனை வசதியை ஏற்படுத்தியிருப்பது கடல் தொழில்நுட்ப அறிவியலில் ஒரு மைல் கல் என மத்திய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. ஊடகங்கள் உண்மைச் செய்திகளையும், நிகழ்வுகளையும் சமரசமின்றி ஒலிபரப்ப வேண்டும் என தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. அரசியல் சாசன சிற்பி அம்பத்கேரின் பிறந்தநாள் நாளை சமத்துவ நாளாக கொண்டாடப்பட உள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியின் கலப்புக் குழு பிரிவில் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

ஊடகங்கள் லாபநோக்கம் கருதாமல், சமுதாயத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவும், இலக்கியத்தை மேம்படுத்தவும் பாடுபட வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

மும்பையில் குஜராத்தி வார பத்திரிகையின் பவள விழாவில் பேசிய அவர், மக்கள் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கும் பத்திரிகைகள்தான் வாசகர்களை சென்றடைய முடியும் என்றார்.

சமுதாயத்திலும், வாழ்க்கையிலும் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக பத்திரிகைகளின் பங்களிப்பு அமைய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

சென்னையில் உள்ள தேசிய கடல்வள தொழில்நுட்ப நிறுவனம், நீருக்கு அடியில் ஒளியியல் சோதனை வசதியை ஏற்படுத்தியிருப்பதற்கு மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள இந்த நிறுவன வளாகத்தில் இதற்கான நினைவுப்பலகையை திறந்து வைத்துப் பேசிய அவர், நீருக்கு அடியில் ஒளியியல் சோதனை வசதியை ஏற்படுத்தியதற்காக இந்நிறுவனம் உலகளாவிய அங்கீகாரம் மற்றும் சர்வதேச சான்றிதழை பெற்றிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இந்த சாதனை கடல் தொழில்நுட்ப அறிவியலில் சுயசார்பை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீருக்கு அடியில் மேற்கொள்ளப்படும் ஒளியியல் சோதனை ராணுவம் மற்றும் சமூகப் பயன்பாடுகளுக்கு இன்றியமையாதது என்றும் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

சுனாமி போன்ற பேரிடர்களை முன்கூட்டியே கண்டறியவும், நமது கடல் கண்காணிப்புத் திறனை மேம்படுத்தவும் உதவும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஊடகங்கள் உண்மைச் செய்திகளையும், நிகழ்வுகளையும் சமரசமின்றி ஒலிபரப்ப வேண்டும் என தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று தனியார் தொலைக்காட்சியின் ஆண்டுவிழா நிகழ்ச்சியில் பேசிய அவர், தேசியம், தெய்வீகம், தமிழ் என்பதை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்தத் தொலைக்காட்சி, மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களை மக்களிடத்தில் கொண்டு சேர்த்து வருவதாக பாராட்டினார்.

போலிச் செய்திகளை பொதுவெளியில் பரப்பும், சமூக வலைதளப் பக்கங்களும், தேவையற்ற அம்சங்களை சமூகத்தில் விதைக்க முயற்சிக்கும் ஓடிடி தளங்களும் மத்திய அரசால் தடை செய்யப்பட்டிருப்பதையும் திரு. எல். முருகன் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

கம்ப ராமாயணம் தமிழர்களின் நன்மதிப்பையும், சமுதாயப் போக்கையும் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

மதுரை அருகே தனியார் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற கம்பர் விழாவில், மாநில அளவிலான பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி அவர் பேசினார்.

ஒரு தனி மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்பதை கம்ப ராமாயணம் உணர்த்துவதாகக் கூறிய அவர், பெண்களின் கண்ணியம் போற்றப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வால்மீகி ராமாயணத்தில் போற்றப்படுவதைவிட கம்ப ராமாயணத்தில் தமிழ்ப் பெண்களுக்கு மிகுந்த கௌரவம் அளித்து கம்பர் விவரித்துள்ளதாக ஆளுநர் கூறினார்.

ஆனால் ஆளும் கட்சியை சேர்ந்த ஒருவர் சில தினங்களுக்கு முன் பெண்களை தரம் தாழ்ந்து விமர்சித்திருப்பதாக ஆளுநர் தெரிவித்தார்.

தமிழ்க் கலாச்சாரத்தின் அடையாளத்தை அழிக்கவும், சைவ, வைணவ உணர்வுகளை புன்படுத்தும் வகையிலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கண்டனத்திற்குரியது என்றும் ஆளுநர் திரு. ரவி குறிப்பிட்டார்.

முன்னதாக கம்ப ராமாயணத்தை கம்பர் அரங்கேற்றிய தினத்தையொட்டி சிவகங்கை மாவட்டம் நாட்டரசன்கோட்டையில் உள்ள கம்பர் நினைவிடத்தில் ஆளுநர் மரியாதை செலுத்தினார்.

<<<<>>>>

அரசியல் சாசன சிற்பி அம்பத்கேரின் பிறந்தநாள் நாளை சமத்துவ நாளாக கொண்டாடப்பட உள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் சென்னை ராஜா அண்ணாமலைபுரம் அம்பேத்கர் மணிமண்டபத்தில் முதலமைச்சர் தலைமையில் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சென்னை சைதாப்பேட்டை எம்.சி. ராஜா மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 10 தளங்களுடன் கூடிய ஆதிதிராவிடர் மாணவர் விடுதியையும் முதலமைச்சர் திறந்து வைக்க உள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் நடைபெற உள்ள சமத்துவ நாள் விழாவில் இத்துறையின் சார்பில் 227 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதி உள்ளிட்ட கட்டிடங்கள் மற்றும் பழங்குடியினருக்கான குடியிருப்புகளையும் முதலமைச்சர் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்க இருப்பதாகவும் அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழ்நாட்டின் நலனுக்கான எந்தவித உறுதியையும் பிஜேபியிடம் கேட்காமல் அஇஅதிமுக அக்கட்சியுடன் கூட்டணி வைத்திருப்பதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. ரகுபதி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஜி.எஸ்.டி. வரிப் பகிர்வு முறையை ஏற்றுக்கொண்டு தமிழகத்தின் பொருளாதார உரிமையையும், உதய் மின் திட்டத்தில் கையெழுத்திட்டதன் மூலம் மின் கட்டண நிர்ணய உரிமையையும் விட்டுக்கொடுத்தவர் திரு. எடப்பாடி பழனிசாமி என குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>

அஇஅதிமுக – பிஜேபி இடையே கூட்டணி ஏற்பட்டிருப்பது முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினுக்கு அச்சத்தை ஏற்படுத்தி இருப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் பிஜேபி புகுந்துவிடும் என்று கூறி, முதலமைச்சர் நான்கு ஆண்டுகளை கழித்துவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

கச்சத்தீவு, தொகுதி மறுசீரமைப்பு மற்றும் நீட் விவகாரங்களில் கடந்த 4 ஆண்டுகளாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காத முதலமைச்சர், இனியும் தமிழக மக்களை ஏமாற்ற முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

திமுக அரசின் ஊழல் தொடர்பாக சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்திருப்பது முதலமைச்சருக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் 61 நாள் மீன்பிடி தடைக்காலம் நாளை நள்ளிரவு முதல் அமலுக்கு வருகிறது.

இந்த தடைக்காலத்தில் மீன்பிடிக்கச் செல்லும் விசைப் படகுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் ஸ்மார்ட் போன்கள் மற்றும் கணினிகளுக்கு கூடுதல் வரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

------------

அசாம் மற்றும் மேகாலயாவில் இன்று கனமழை பெய்யக்கூடும் என வானிலை மையம் எச்சரித்துள்ளது.

------------

ஜம்மு-கஷ்மீர், லடாக் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நீதிபதி அருண் பாலி நியமிக்கப்பட்டுள்ளார்.

------------

இந்தியா – அமெரிக்கா இடையேயான 4வது கூட்டு ராணுவ முப்படை பயிற்சி நேற்று ஆந்திராவில் நிறைவு பெற்றது.

------------

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில் பௌர்ணமி கிரிவலத்தில் லட்சக்கணக்கானோர் கிரிவலம் வந்தனர்

------------

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பன்னாரி அம்மன் கோவில் குண்டம் திருவிழாவில் படுகர்கள் நடனம் ஆடி வழிபட்டனர்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியின் கலப்புக் குழு பிரிவில் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியாவின் **Rishab Yadav, Jothi Sureka Vennam** அணி, 153-151 என்ற புள்ளிக் கணக்கில் தைவான் அணியை வென்றது.

---------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 8 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணி வெற்றி பெற்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் ராஜஸ்தான் - பெங்களூரு அணியையும், தில்லி – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

------------

புனேயில் நடைபெற்று வரும் **Billie Jean King** கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் இந்தியா 2-1 என்ற ஆட்டக் கணக்கில் தென் கொரியாவை வென்றது.

இதுவரை நடைபெற்ற 5 ஆட்டங்களில் இந்தியா 4-ல் வெற்றி பெற்றதன் மூலம் பிளே ஆஃப் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

**<<<<The End>>>>**